<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 91/2013 நாள்: 11.03.2026 பி.வா.சா.1 – கோமதிநாயகம்**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு கூடுதல் முதல் விசாரணை தொடர்ச்சி -</u>**

பி.சா.ஆ.13 – உடுமலைபேட்டை, சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.460/1994 ல் 3வது வாதிக்கு வந்த அழைப்பாணை நகல்

பி.சா.ஆ.14 – உடுமலைபேட்டை, சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.460/1994 ல் 2வது வாதிக்கு வந்த அழைப்பாணை நகல்

பி.சா.ஆ.15 – உடுமலைபேட்டை, சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.460/1994 ல் 1வது வாதிக்கு வந்த அழைப்பாணை நகல்

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

உடுமலைபேட்டை, சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.460/1994 வழக்கினுடைய தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வழக்கில் எனது கணவர் 3வது பிரதிவாதி என்றால் சரிதான். இந்த வழக்கில் எனது கணவர் 2 வது பிரதிவாதி என்றால் சரிதான். உடுமலைபேட்டை, சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.460/1994 என்ற வழக்கின் தீர்ப்பு 21.07.2025 ல் பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் என்னையும் ஒரு தரப்பினராக சேர்க்க வேண்டும்

என்று மனு தாக்கல் செய்து அது அனுமதிக்கப்பட்டு நான் இந்த வழக்கில் 8 வது பிரதிவாதியாக சேர்க்கப்பட்டேன் என்றால் சரிதான். ஆனால் அசல் வழக்கு எண்.460/1994 வழக்கில் என்னையும் ஒரு தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று சொல்லி மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் எனக்கு எழுதி கொடுத்ததாக சொல்லப்படும் செட்டில்மெண்ட் ஆவணம் அசல் வழக்கு எண்.460/1994 ல் பி.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் எனது பெயருக்கு எனது கணவர் எழுதி கொடுத்ததாக சொல்லப்படும் செட்டில்மெண்ட் ஆவணம் மேற்படி செட்டில் மெண்ட் ஆவணம் தான். மேற்படி ஆவணம் இந்த வழக்கில் பி.சா.ஆ.7 ஆக குயியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.7 ல் உள்ள சொத்து விவரமும், அசல் வழக்கு எண்.460/1994 ல் உள்ள சொத்து விவரமும் ஒன்று என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு எண்.460/1994 வழக்கை எனது கணவர் 3வது பிரதிவாதியாகவும், எனது கணவரின் சகோதரர் மயில்சாமி 7வது பிரதிவாதியாகவும் இருந்து மேற்படி வழக்கை நடத்தினார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எனது கணவரின் மற்றொரு சகோதரர் கிருஷ்ணகுமார் மற்றும் எனது மாமியார் ஆகியோர்கள் முன்னிலையாகி நடத்தவில்லை என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு எண்.460/1994 ல் இந்த வழக்கின் வாதிகள் தோன்றாதரப்பினராக இருந்த காரணத்தினால் அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச தீர்ப்பாணை

பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் கூடுதல் முதல் விசாரணையில் இவ்வழக்கு வாதிகள் நேரில் முன்னிலையாகிவிட்டு பின்பு மேற்படி அசல் வழக்கு எண்.460/1994 ல் தொடர்ந்து நடத்தவில்லை என்று நான் சொல்லியுள்ள சங்கதி பொய் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.460/1994 வழக்கின் தீர்ப்பிற்கு எதிராக எனது கணவரோ, எனது கணவரின் சகோதரர் மயில்சாமியோ மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சாட்சி அது பற்றி எனக்கு தெரியாது என்று கூறுகிறார். மேற்படி அசல் வழக்கு எண்.460/1994 வழக்கின் தீர்ப்பை நாங்கள் ஏற்றுக்கொண்ட காரணத்தினால் தான் நாங்கள் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.460/1994 வழக்கின் தீர்ப்பு, தீர்ப்பாணை மற்றும் வழக்கு விவரங்களை நான் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆக இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குடும்ப ஏற்பாடு ஆவணத்தை எனது கணவரின் சகோதரர்கள் எடுத்து சென்றுவிட்டார்கள் என்று நான் சொல்லியுள்ள சங்கதியை அசல் வழக்கு எண்.460/1994 ல் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். எனது கணவருக்கும், அவரது சகோதரர் மயில்சாமிக்கும் அசல் வழக்கு எண்.460/1994 ல் உள்ள தாவா சொத்து ஒதுக்கீடு செய்யப்பட்டதாக சொன்னதை மேற்படி வழக்கை விசாரணை செய்த உடுமலைபேட்டை சார்பு நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு எண்.460/1994 ல் இவ்வழக்கு பி.சா.ஆ.1 ஆன குடும்ப

ஏற்பாட்டை தாக்கல் செய்யாததற்கு காரணம் எதுவும் எனது கணவரும், அவரது சகோதரர் மயில்சாமியும் சொல்லவில்லை என்று குறிப்பிட்டு தீர்ப்புரையில் தெரிவித்துள்ளார்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.சா.ஆ.1 ஆன குடும்ப ஏற்பாட்டின் படி எனது கணவருக்கும், அவரது சகோதரர் மயில்சாமிக்கும் சொத்துக்கள் பாத்தியப்பட்டதல்ல என்று அசல் வழக்கு எண்.460/1994 ல் நீதிமன்றம் தீர்ப்புரை பிறப்பித்துள்ளது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்களும், இதர சொத்துக்களும் எனது கணவரின் தந்தை R.C.நடராஜனுக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்று உடுமலைபேட்டை, சார்பு நீதிமன்றம் தீர்ப்பு பிறப்பித்துள்ளது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் வாதி கிரைய ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள காலக்கெடுவிற்குள் கிரையம் முடிக்க முன்வராத காரணத்தினாலும், தயாராக இல்லாத காரணத்தினாலும் மேற்படி வழக்கில் உள்ள வாதிக்கு ஏற்றுதலை ஆற்றுக பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும், எனவே கிரைய முன்தொகையை வட்டியுடன் பிரதிவாதிகள் மற்றும் இவ்வழக்கின் வாதிகள் திரும்ப செலுத்த வேண்டும் என்று தீர்ப்புரை பிறப்பித்துள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.7 ஆன செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று மேற்படி அசல் வழக்கு எண்.460/1994 ல் தீர்ப்புரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது கணவரின் சகோதரர் கிருஷ்ணகுமார் வா.சா.ஆ.14 ன் படி ஒரு பாலாமணி

என்பவருக்கு தாவா சொத்தில் 1/7 பாகத்தை கிரையம் செய்து கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. மேற்படி வா.சா.ஆ.14 ஆவணம் ஏற்படுத்தப்படும் வரை எனது மாமனார் நடராஜன் பெயரில் தான் வருவாய் துறை ஆவணங்கள் இருந்தது என்றால் சரியல்ல. தாவா சொத்து முதலில் தரிசு நிலமாக இருந்தது, பிறகு எனது மாமனார் தென்னந்தோப்பாக மாற்றினார் என்றால் சரிதான். எனது மாமனார் நடராஜன் செட்டியார் காலமான பிறகு எனது கணவர் மற்றும் அவரது சகோதரர்கள் தென்னந்தோப்பின் வருமானத்தை பிரித்து கொண்டார்கள் என்றால் சரியல்ல, எனது மாமியார் தான் வருமானத்தை அனுபவித்து வந்தார் என்று கூறுகிறார். இந்த வழக்கு நிலுவையில் உள்ள போது எனது மாமியார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது மாமியார் காலமான பிறகு தென்னந்தோப்பின் வருமானத்தை எனது கணவர் மற்றும் அவரது சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு தாவா சொத்தில் உள்ள தென்னை மரங்களுக்கு தண்ணீர் பாய்க்காததால் அவை பட்டு போய்விட்டது என்றால் சரியல்ல, வாதிகளும், அவரது சகோதரர்களும் சேர்ந்து தென்னை மரத்தை வெட்டி சென்றுவிட்டடதாக சாட்சி கூறுகிறார். தாவா சொத்து இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகும், விவசாய பூமியாக தான் இருந்தது என்றால் சரியல்ல. நாங்கள் பொய்யாக அது நகர்புற காலியிடம் என்று வருவாய் துறை ஆவணங்களில் வகைபடுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல, மேற்படி நிலம் நகர்புற காலியிடம் என்று

இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே வகைபடுத்தப்பட்டுவிட்டது என்று சாட்சி கூறுகிறார், நான் வழக்கிற்காக மேற்கண்ட சங்கதியை பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து நடராஜன் செட்டியாருக்கு பாத்தியப்பட்டது என்றதால் வாதிகள் கோரியவாறு தாவா சொத்தில் பாகம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.03.11 17:45:32 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.